## ஒரு MCLOவைத் தொடர்பு கொள்ளுங்கள்

NSW முழுவதிலும் 25 காவல் நிலையங்களில் பணிபுரிகின்ற 33 MCLOகள் உள்ளனர். அவர்களை சந்திப்பதற்கான ஒரு முன்பதிவிற்கு தொலைபேசியில் அழைக்கலாம் அல்லது வார நாட்களின்போது காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை அவர்களை சந்திக்கலாம். MCLOகள் பின்வரும் காவல் நிலையங்களில் இடம்பெற்றுள்ளனர்.

**Ashfield**
14 Victoria Street
Ashfield 2131
9797 4099

**Bankstown**
2 Meredith Street
Bankstown 2200
9783 2199

**Blacktown**
11 Kildare Road
Blacktown 2148
9622 0000

**Burwood**
Belmore Road
Burwood 2134
9745 8499

**Cabramatta**
243-249 Cabramatta Rd West,
Cabramatta 2166
9725 8999

**Campbelltown**
65 Queen Street
Campbelltown 2560
4620 1201

**Campsie**
58 Campsie Street
Campsie 2194
9789 0999

**Eastern Beaches**
136 Maroubra Road
Maroubra 2035
9349 9299

**Fairfield**
40-42 Smart Street
Fairfield 2165
9728 0399

**Flemington**
Corner Susan & Queen Street
Auburn 2144
9646 8699

**Green Valley**
193-195 Wilson Road
Green Valley 2168
9607 1799

**Holroyd**
15-17 Memorial Avenue
Merrylands 2160
9897 4899

**Kuring-gai**
292 Pacific Highway
Hornsby 2077
9476 9799

**Liverpool**
148 George Street
Liverpool 2170
9821 8444

**Macquarie Fields**
10 Brooks Street
Macquarie Fields 2564
9605 0479

**Mt. Druitt**
Cnr Luxford Road & Kelly Close
Mt. Druitt 2770
9675 8623

**Newcastle**
30 Harriet Street
Waratah 2298
4926 6599

**North Shore**
63 Archer Street
Chatswood 2067
9414 8499

**Parramatta**
95 Marsden Street
Parramatta 2150
9633 0799

**Rosehill**
2 Carlton Street
Granville 2142
9897 4199

**Ryde**
8 Victoria Road
Gladesville
9879 9699

**St. George**
36-38 Ormonde Parade
Hurstville 2220
9375 8599

**St Marys**
38-42 King Street
St Marys 2760
9677 7499

**Sydney City**
129 Day Street
Darling Harbour 2000
9265 6499

**Wollongong**
Cnr Church & Market Streets
Wollongong 2500
4226 7899

உங்களுக்கு உதவும்பொருட்டு காவல் துறையினர் ஒரு தனிப்பட்ட தொழில்முறையிலான மொழிபெயர்ப்பாளரை தொலைபேசி மூலமாகவோ அல்லது நேரிலோ ஏற்பாடு செய்ய முடியும். பகல் அல்லது இரவின் எந்த நேரத்திலும் **AUSLAN** உள்ளிட்ட அனைத்து மொழிகளிலும் உதவி வழங்கப்பட முடியும். நீங்கள் என்ன மொழி பேசுகின்றீர்கள் என்பதை மட்டும் காவல் துறையினரிடம் கூறுங்கள்.

**Triple Zero (000)**
For emergencies or life threatening situations.

**Police Assistance Line (131 444)**
For non emergencies.

**Crime Stoppers (1800 333 000)**
To provide crime information. It can be anonymous.

**Follow us on** facebook com/nswpoliceforce
twitter.com/nswpolice youtube.com/thenswpolice
**or visit** www.police.nsw.gov.au

Tamil

NSW Police Force

# பன்கலாச்சார சமூகத் தொடர்பு அதிகாரிகள்





குற்றம் மற்றும் வன்முறையைக் குறைப்பதும் பொதுமக்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதுமே NSW காவல் படையின் முக்கியக் கடமையாகும். இதைச் செய்வதற்கு, காவல் துறையினர் கலாச்சாரத்தாலும் மொழியாலும் வேறுபட்ட (CALD) பின்னணிகளைக் கொண்ட உறுப்பினர்கள் உள்ளிட்ட சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்களுடனும் நெருக்கமாகப் பணிபுரிய வேண்டியுள்ளது.



பன்கலாச்சார சமூகத் தொடர்பு அதிகாரிகள் (MCLO) என்போர் சமூகத்தினர் காவல் துறையின்மீது கொண்டுள்ள நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் மேம்படுத்த உதவுவதற்கு NSW காவல் படையால் பணியமர்த்தப்பட்டுள்ள படைத்துறை சாரா ஊழியர்கள் ஆவர்.

MCLO என்போர் காவல்துறை அதிகாரிகளாக இல்லாதபோதிலும், அவர்கள் காவல் துறையுடனருடன் இணைந்து பணிபுரிவதற்கு, சமூகப் பிரச்சனைகள் மற்றும் அவர்களின் உள்ளூர் சமூகத்தினரின் கவலைகளையும் தேவைகளையும் புரிந்துகொண்டு சமூகத்தினருடன் நல்லமுறையில் இணைந்திருப்பதற்கான வழிகள் ஆகியவற்றின் மீது அவர்களுக்கு அறிவுரை கூறுவதற்கு பயிற்சியளிக்கப்பெற்றுள்ள வல்லுநர்கள் ஆவர்.

தங்களின் கலாச்சாரம், சமயம் மற்றும் மொழித் தேவைகள் ஆகியவற்றில் துணைபுரிவதற்குக் கூடுதல் உதவி மற்றும் சேவைகள் தேவைப்படக்கூடிய மக்களுடன் காவல் துறையினர் தொடர்புகொள்ளும்போது MCLOகள் காவல் துறையினருக்கு உதவுகின்றனர். சமூகத்தினருக்கு கலாச்சாரரீதியான மற்றும் மொழிரீதியான உணர்திறன்மிக்க மற்றும் பொருத்தமான காவல் துறையின் சேவைகளுக்கான அணுகல் வழங்கப்படுகின்றது என்பதை அவர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

சமூகத்தினர் காவல் துறையினரைத் தொடர்புகொள்ளும்போது தங்களின் உரிமைகள் மற்றும் தங்களின் பொறுப்புகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்வதற்கும் MCLOகள் உதவுகின்றனர், மேலும் அவர்கள் குற்றச்செயல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றில் காவல் துறையினர் எவ்வாறு பதிலளித்து நிர்வகிப்பர் என்பதையும் விளக்க முடியும்.

MCLOகள் பின்வரும் சேவைகளை வழங்கக்கூடும்:

- ஒரு குற்றத்தைக் காவல் துறையிடம் தெரிவிக்கும் சமூக உறுப்பினர்களுக்கும் தனிநபர்களுக்கும் உதவுதல்
- குற்றத்தால் பாதிக்கப்பட்டோர், அவர்களின் குடும்பத்தினர் மற்றும் சமூகம் ஆகியோருக்குத் துணைபுரிந்து அவர்களுடன் பணிபுரிதல்
- குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டோருக்கு நீதிமன்றத்தில் துணைபுரிதல்
- பொருத்தமான காவல் துறையின் சேவைகளுக்குப் பரிந்துரை மற்றும் அணுகல் ஆகியவற்றை வழங்குதல்
- பிற முகைமைகளுக்குப் பரிந்துரை மற்றும் அணுகல் ஆகியவற்றை வழங்குதல்
- சமூகத்தினருக்கு குற்றத் தடுப்பு, பாதுகாப்பு மற்றும் பிற காவல் துறையினர் சம்பந்தப்பட்ட விடயங்கள் மீதான பேச்சுக்கள், தகவல் அமர்வுகள் மற்றும் ஆலோசனை ஆகியவற்றை வழங்குதல்
- சமூக அடிப்படையிலான குற்றத் தடுப்பு செயல்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் மீது பணிபுரிதல்
- சமூக உறுப்பினர்கள், அமைப்புகள் மற்றும் சமூகத் தலைவர்கள் ஆகியோருடனான வழக்கமான தொடர்பை உருவாக்குதல் மற்றும் அவர்களுடனான கூட்டாண்மையைக் கட்டமைத்தல்
- புதிதாகக் குடியமர்த்தப்பட்டோர், இளம் நபர்கள், மூத்த குடிமக்கள், பெண்கள், புதிய மற்றும் வளர்ந்துவரும் சமூகங்கள், சர்வதேச மாணவர்கள், அகதிகள் மற்றும் புகலிடம் நாடுவோர் போன்ற தாக்குதலுக்குள்ளாகக்கூடிய சமூகத்தினருடன் பணிபுரிதல்
- உள்ளூர் சமூகம் மற்றும் வெவ்வேறு முகைமைகளுக்கிடையிலான பொதுமன்றங்கள் மற்றும் வலையமைப்புகள் போன்றவற்றில் காவல் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்
- காவல் துறை சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக இரகசிய அறிவுரை மற்றும் உதவியை வழங்குதல்

பெரும்பாலான MCLOகள் ஒன்று அல்லது மேற்பட்ட சமூக மொழிகளைப் பேசுகின்றனர், மேலும் அவர்கள் தேவைப்படும் சமயத்தில் அடிப்படை மொழி உதவியையும் வழங்க முடியும்.

குற்றச் செயல்களைக் குறைத்து, தடுத்து, மக்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு, காவல் துறையினர் குற்றச் செயல்களைக் குறித்துத் தெரிவிப்பதற்கும் தங்களின் பாதுகாப்பு மற்றும் தங்கள் அண்டை அயலார்களின் பாதுகாப்பு ஆகியவற்றைக் குறித்த தகவல்களை வழங்குவதற்கும் சமூகத்தினரை சார்ந்துள்ளனர். குற்றச் செயல்களைக் குறித்தும் பாதுகாப்பு கவலைகளைக் குறித்தும் காவல் துறையிடம் தெரிவிப்பதற்கு உங்கள் MCLO உங்களுக்கு உதவமுடியும்.



